திரு. கு. செல்வபெருந்தகை: ஒரேயொரு நிமிடம். என்னுடைய தொகுதியில் ஒரத்தூர் ஆரம்பாக்கம் ஏரி 2020 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. 47 கோடி ரூபாய்க்கு அதற்கான டெண்டர் விடப்பட்டது. அது அப்படியே இருக்கிறது. ஆரம்பாக்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, போதும்.

பிற்பகல் 2–25

7. அறிவிப்பு

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் திருவுருவப்படத் திறப்பு விழாவினையொட்டிய விழா-சிறப்பு மலர் வெளியிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா நிகழ்வினையொட்டிய விழா சிறப்பு மலரினை 10–5–2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9–00 மணியளவில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் வெளியிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவுத் தெரிவித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய (மார்க்சிஸ்ட்) கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்றத் தலைவர்கள், முன்வரிசைத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களையும் தனித்தனியாக அழைத்ததாகக் கருதி, இந்நிகழ்ச்சியில் நாளை காலை 9–00 மணிக்குக் கலந்துகொண்டு சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.